செய்தி வெளியீடு எண்: 276 நாள் : 09.06.2016

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

2016–17 கல்வியாண்டிற்கான பாடநூல்களை பள்ளிகள் மொத்தமாக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்து விநியோகிக்கின்றன. மாணவர்களும் தமக்கு தேவைப்படும் 2016–17 கல்வியாண்டிற்கான 1 முதல் 12ம் வகுப்பு வரையிலான பாடநூல்களை www.textbookcorp.in இணையதளம் மூலம் பதிவு செய்து பணம் செலுத்தி பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

இது தவிர

பாடநூல்களை எளிதில் வாங்கிடும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் (Taluk offices)அலுவலகங்களிலும் உள்ள 269 “இ” -சேவை மையங்களிலும் (Common Service Centres (CSC) of Tamil Nadu Arasu Cable TV) தேவைப்படும் பாடநூல்களுக்கான தொகையை செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளலாம். மேற்படி பாடநூல்கள் 48மணி நேரத்துக்குள் அவர்களது இல்லத்திற்கு கூரியர் சேவை மூலம் வந்து சேரும்.

“இ”-சேவை மையங்களின் விலாச விவரங்கள் www.textbookcorp.in என்ற இணையதளத்திலிருந்து தெரிந்துக்கொள்ளலாம். இணையத்தளத்தின் மூலமாக பாடநூல் விலை விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9